# வட மத்திய மாகாண பாடசாலைகளில் நிலவும் சிங்கள தமிழ் மொழிமூல இலங்கை ஆசிரியர் சேவையின் 3 ஆம் வகுப்பின் 1 (அ) தரத்தின் ஆசிரியர்வெற்றிடங்களிற்கு பட்டதாரிகளினை இணைத்துக் கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2023

வட மத்திய மாகாண சபையின் கீழுள்ள பாடசாலைகளில் நிலவும் இலங்கை ஆசிரியர் சேவையின் ஆசிரிய வெற்றிடங்களிற்காக வட மத்திய மாகாண அரசாங்க சேவையில் இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பிற்கமைவாக இலங்கை ஆசிரியர் சேவையின் வகுப்பு 3 தரம் 1 (அ) இற்கு இணைத்துக் கொள்வதற்காக இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ள வட மத்திய மாகாணத்தை நிரந்தர வசிப்பிடமாகக் கொண்ட பட்டதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்ப படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி 2023.11.24 ஆகும்.

01. சிங்கள மற்றும் தமிழ் மொழி மூலத்திற்காக மாகாண அடிப்படையில் நிலவும் காலியிட எண்ணிக்கைக்கு இணங்க போட்டிப் பரீட்சை மற்றும் பிரயோகப் பரீட்சையில் பெற்றுக் கொண்ட மொத்த புள்ளிகளின் எண்ணிக்கை அடிப்படையில் நிலவும் ஒவ்வொரு பாட வெற்றிடத்திற்கும் இணங்க தகுதிவாய்ந்த விண்ணப்பதாரிகளினை ஆட்சேர்ப்புச் செய்தல் இடம் பெறும். காணப்படும் மானியங்களிற்கிணங்க மற்றும் சேவை அவசியத்தின் அடிப்படையில் 2023.06.30 ம் திகதி வரை காணப்படும் வெற்றிடங்களிற்காக ஆட்சேர்ப்பு நடைபெறும். ( வெற்றிட ஆவணம் கோவை 01 ல் காட்டப்படும்)

02. சம்பள அளவுத்திட்டம்

இப்பதவிக்குரிய மாதாந்த சம்பளம் 2022.01.05 அம் திகதி 03/2016(iv) அரசாங்க சுற்றறிக்கையின் ஜீ.ஈ.1-2016 ஆம் சம்பளத் தொகுதிக்கு உரியதான 31'490 - 6X445 - 7X525 -2 X600 – 39'035 ஆகும்'நீங்கள் இந்த சம்பளத் திட்டத்தின் 14 வது சம்பள நிலையில் அமர்த்தப்படுவீர்கள். இதற்கு மேலதிகமாக அரச உத்தியோகத்தர்களிற்கு அரசினால் காலத்துற்குக் காலம் செலுத்தப்படும் கொடுப்பனவுகளும் உரித்தாகும்.

03. கல்வி மற்றும் வேறு தகைமைகள்

3.1 கல்வித் தகைமை

I. விண்ணப்பதாரர்கள் கற்பித்தல் நோக்கங்களிற்காக ஏற்றுக் கொள்ளப்பட்ட சிறப்புத் துறைகளைச் சேர்ந்த பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகத்தால் அல்லது பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டம் வழங்கும் நிறுவனம் ஒன்றினால் வழங்கப்பட்ட அட்டவணை 01ல் குறிப்பிடப்பட்டுள்ள பாடங்களில் பட்டமொன்றைப் பெற்றிருக்க வேண்டும்.

மற்றும்

II. கல்விப் பொதுத்தராதரப் பத்திர (சாதாரண தரப்) பரீட்சையில் இரண்டு அமர்வுகளிற்கு மேற்படாத தவணைகளில் சிங்கள மொழி அல்லது தமிழ் மொழி மற்றும் கணிதம் ஆகியவற்றுடன் ஏதேனும் மூன்று பாடங்களில் திறமைச் சித்திகளோடு ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும். மற்றும் கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையில் ஒரே தடவையில் 03 பாடங்களிலும் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

மிக முக்கியம் - விண்ணப்பத்தினைப் பூர்த்தி செய்யும் போது கவனத்தில் கொள்ள வேண்டியவை

- விண்ணப்பதாரர்கள் தங்கள் பட்டத்திற்கு அமைவாக விண்ணப்பிக்க கூடிய பாடங்கள் குறித்து கவனம் செலுத்துதல் வேண்டும்.
- அசிரியர் வெற்றிடங்களிற்கு பட்டப்படிப்பில் பயின்ற முக்கிய பாடம்/ பாடங்களிற்கு மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.
- விண்ணப்பித்த பாடம் மற்றும் மொழியை எக்காரணத்திற்காகவும் பின்னர் மாற்ற இடமளிக்கப்பட மாட்டாது.

3.2 உடல் மற்றும் உளத் தகுதிகள்

எல்லா விண்ணப்பதாரிகளும் ஆசிரியராகக் கடமையாற்றுவதற்கு உகந்த உடல் மற்றும் உளத் தகுதியுடன் இருத்தல் அவசியம்.

3.3 வயது

விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் தினத்தில் வயது 18 வருடங்களிற்கு குறையாமலும் 35 வருடங்களிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

3.4 வேறு தகுதிகள்

I. விண்ணப்பதாரர் இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
II. விண்ணப்பதாரி சிறந்த உடலாரோக்கியமுடையவராயிருத்தல் வேண்டும்.
III. மாகாணத்தின் எப்பிரதேசத்திலும் சேவையாற்ற இயலுமாயிருத்தல் வேண்டும்.
IV. விண்ணப்பதாரி அல்லது அவரது துணை விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் தினத்திற்கு முன்னரான 03 வருடங்களிற்கு வட மத்திய மாகாணத்தில் நிரந்தர வசிப்பிடத்தைக் கொண்டவராக இருத்தல் வேண்டும்.(கிராம உத்தியோகத்தரினால் வழங்கப்படும் வதிவிடச் சான்றிதழ் மூலமாக நேர்முகப் பரீடசைச் சந்தர்ப்பத்தில் உறுதிப்படுத்தப் படல் வேண்டும்.

04. சேவை நிபந்தனைகள்

4.1 நியமனம் பெறும் பாடசாலையில் சேவையினைப் பொறுப்பேற்ற நாள் தொடக்கம் 05 வருடங்கள் கண்டிப்பாக சேவையாற்றல் வேண்டும். 05 வருட செவைக்காலத்தின் பின்னர் இட மாற்றத்திற்கு தகைமை பெறுவர்.

4.2 அரசாங்க / மாகாண அரசாங்க சேவை நியமனங்களை நிர்வகிக்கும் பொது நிபந்தனைகளிற்கும், மாகாண அரசாங்க சேவையில் ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பின் நிபந்தனைகளிற்கும் அதற்கு மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் அல்லது இதன் பின் மேற்கொள்ளப்படும் திருத்தங்களிற்குட்பட்டு இலங்கை ஆசிரியர் சேவையின் வகுப்பு 3 தரம் 1(அ) இற்கு நியமிக்கப்படுவர்

4.3 இந்நியமனம் நிரந்தரமானது. ஓய்வூதியமுடையது

4.4 ஓய்வூதியக் கொடுப்பனவு தொடர்பாக அரசினால் எதிர்காலத்தில் மேற் கொள்ளப்படும் கொள்கைத் தீர்மாணங்களிற்கு நியமனம் பெறுபவர்கள் கீழ்ப்படிதல் வேண்டும்.

4.5 இப்பதவியில் நியமிக்கப்படுபவர்கள் 03 வருட கால நன்நடத்தைக் காலத்திற்கு உட்படல் வேண்டும்.

4.6 பதவியுயர்வுகள் வடமத்திய மாகாண ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பின் ஏற்பாடுகளிற்கு அமைவாக மேற் கொள்ளப்படும்.

4.7 2020.10.16 அம் திகதிய அரச நிர்வாகச் சுற்றறிக்கை 18/2020 மற்றும் அவ்வப்போது அதில் செய்யப்பட்ட திருத்தங்களிற்கு இணங்க பரிந்துரைக்கப்ட்ட இரண்டாவது அரச கரும மொழியில் தேர்ச்சி பெற வேண்டும்.

05. ஆட்சேர்ப்பு

5.1 ஆட்சேர்ப்பு முறை

I. 2008.07.01ஆம் திகதி தொடக்கம் நடைமுறையில் உள்ள வட மத்திய மாகாண ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பின் 7.2.4 அம் பிரிவின்படி ஆட்சேர்ப்பு மேற் கொள்ளப்படும்.
II. தேர்வு செய்வதற்காக எழுத்து மூலப் போட்டிப் பரீட்சையொன்று நடைபெறும், எழுத்துப் பரீட்சையில் சித்தியடைவோர் அவர்கள் பெறும் புள்ளிகளின் தகைமை வரிசைப்படி ஒவ்வொரு பாடத்திற்கும் மாகாணத்தில் நிலவும் வெற்றிடங்களின் மூன்று மடங்கினர் (03) பொதுவான நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்படுவர்
III. பொதுநேர்முகப் பரீட்சையில் சித்தியடைவோர் அத்தினமே செயன்முறைப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்
IV. எழுத்துப் பரீட்சையிலும் செய்முறைப் பரீட்சையிலும் அதிக புள்ளிகளைப் பெற்ற மற்றும் இங்கு 03வது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்கள் தெரிவு செய்யப்படுவர்

5.2 எழுத்துப் போட்டிப் பரீட்சை - இந்தப் பரீட்சை இரண்டு வினாத் தாள்களைக் கொண்டது.

| பாடம் | அதிகூடிய புள்ளிகள் | சித்தியடைவதற்குத் தேவையான ஆக் குறைந்த புள்ளிகள் |
|---|---|---|
| 1. நுண்ணறிவுப் பரீட்சை | 100 | 40 |
| 2. பொது அறிவு | 100 | 40 |

பாடத்திட்டம்

பாட இலக்கம் 01 - நுண்ணறிவுப் பரீட்சை

- விண்ணப்பதாரியின் ஆசிரியர் சேவைக்குரிய திறமை, தர்க்கிக்கும் ஆற்றல் தொடர்பான அறிவை அளவிடுவதை நோக்காகக் கொண்டு இவ்வினாப் பத்திரம் தயாரிக்கப்படும். இது பல்தேர்வு மற்றும் சுருக்கமாக விடையளிக்கும் 50 வினாக்களைக் கொண்டது. அனைத்து வினாக்களிற்கும் விடையளித்தல் அவசியம்.

பாட இலக்கம் 02 - பொது அறிவு

- துறைசார்ந்த பொது அறிவினைப் பரீட்சிக்கும்பல்தேர்வு மற்றும் சுருக்கமாக விடையளிக்கும்வினாக்களைக் கொண்டது

- தேசிய அளவில் நடைபெற்ற அல்லது நடைபெறும் கல்வித் தறையின் போக்குகள் தொடர்பான பொது அறிவு மற்றும் கல்வி நவீனமாக்கல் தொடர்பான பொது அறிவினைப் பரீட்சிக்கும் வினாக்களைக் கொண்டது. அனைத்து வினாக்களிற்கும் விடையளித்தல் வேண்டும்.

5.3 பரீட்சை நடைமுறை

- இப் பரீட்சையானது சிங்களம், தமிழ் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும். ஆங்கில மொழி வெற்றிடங்களிற்காக விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் தமது பரீட்சைக்குத் தோற்றும் மொழியினை விண்ணப்ப படிவத்தில் குறித்த இடத்தில் குறிப்பிடல் வேண்டும்.
- அனைத்து விண்ணப்பதாரிகளும் அனைத்து பாடங்களிற்கும் ஒரே மொழியில் விடையளித்தல் வேண்டும்.
- விண்ணப்பதாரியொருவர் தனது விண்ணப்பத்தில் குறிப்பிட்ட மொழி மூலத்தினை மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.
- அனைத்து விண்ணப்பதாரிகளும் இரு பாடங்களிற்கும் தோற்றுதல் அவசியமாகும்.
- ஆட்சேர்ப்புச் செய்யும் எண்ணிக்கையானது நியமண அதிகாரியினால் தீர்மாணிக்கப்படும்.

5.4 பொது நேர்முகத் தேர்வு

சேவைப் பிரமாணக் குறிப்பின்படி பிரசுரிக்கப்படும் வர்த்தமானி அறிவித்தலில் அல்லது பத்திரிகை விளம்பரத்தில் அல்லது இணையத்தளத்தள விளம்பரத்தில் குறிப்பிட்ட தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளாரா எனப் பரீட்சித்தல் மற்றும் உடல் தகுதியினைப் பரீட்சித்தல், வட மத்திய மாகாண அரச சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் நேர்முகப்பரீட்சை குழுவினால் நடாத்தப்படும்.

5.5 செயன்முறைப் பரீட்சை முறை

| தொ.இல | செயன்முறைப் பரீட்சையில் புள்ளிகள் வழங்கப்படும் நியமங்கள் | அதிகூடிய புள்ளிகள் |
|---|---|---|
| 01. | குறிக்கோள் மற்றும் பிரவேஷம் | 05 |
| 02. | ஆளுமை மற்றும் குரல் கட்டுப்பாடு | 05 |
| 03. | தொடர்பாடல் தெளிவு | 05 |
| 04. | நேர முகாமைத்துவம் | 05 |
| 05. | முன்வைத்தல் நுட்ப முறைகளின் பயன்பாடு | 05 |
| மொத்த புள்ளிகள் | | 25 |

5.6 செயன்முறைப் பரீட்சை முறை

I. செயன்முறைப' பரீட்சைக்காக 05 நிமிடங்களிற்குக் குறையாத காலம் வழங்கப்படும்.
II. செயன்முறைப் பரீட்சையில் பெற்றுக் கொள்ளக் கூடிய அதிகூடிய புள்ளிகள் 25 ஆகும்.
III. செயன்முறைப பரீட்சையில் சித்தியடைவதற்காக ஒவ்வொரு நியமங்களிலும் ஆகக் கூடியது இரண்டு புள்ளிகள் வீதம் பெறல் வேண்டும்.
IV. செயன்முறைப் பரீட்சையின் மதிப்பீடு வட மத்திய மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் தேர்வுச் சபையினால் மேற்கொள்ளப்படும்.

5.7 நியமங்களின் குறிக்கோள்கள்

I. குறிக்கோள் மற்றும் பிரவேஷம்

வெற்றிகரமாக பாடத்தின் நோக்கத்தினை விளக்குதல் மற்றும் பாடப்பிரவேஷம் செய்யும் திறமையினை மதிப்பிடல்

II. ஆளுமை மற்றும் குரல் கட்டுப்பாடு

ஒரு ஆசிரியராக சிறந்த ஆளுமையுடன் காணப்படல் மற்றும் கற்பித்தலில் சிறப்பாக குரலினை பயன்படுத்தும் தன்மை பற்றி மதிப்பிடல்

III. தொடர்பாடல் தெளிவு

கற்றல் கற்பித்தல் நடவடிக்கையில் உரிய விடயங்களை உற்பத்தி திறனுள்ள முறையில் தெரிவிக்கும் திறமையினை மதிப்பிடல்

IV. நேர முகாமைத்துவம்

வழங்கப்படும் நேரத்தினுள் நோக்கத்தினை அடைந்து கொள்ளும் திறமையினை மதிப்பிடல்

V. முன்வைத்தல் நுட்ப முறைகளின் பயன்பாடு

நோக்கத்தினை அடைந்து கொள்வதற்காக முன்வைத்தல் நுட்ப முறைகளை சிறப்பாக பயன்படுத்தும் திறமையினை மதிப்பிடல்

06. பரீட்சைக் கட்டணம்.

6.1 பரீட்சைக் கட்டணம் ரூ.720.00. ஆகும் இக்கட்டணத்தினை விண்ணப்படிவம் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதி நாளில் அல்லது அதற்கு முன்னர் வட மத்திய மாகாணத்தில் அமைந்துள்ள ஏதேனுமொரு பிரதேச செயலாளர் காரியாலயத்தில் வடமத்திய மாகாண வருமானத் தலைப்பு 2003-02-13 ற்கு வரவு வைத்து செலுத்த முடியும். தமது பெயரில் பெறப்பட்ட என்.சி.பி.100 பற்றுச்சீட்டினை அதற்குரிய இடத்தில் கழறாதவாறு ஒட்டி அனுப்புதல் வேண்டும். இப்பரீட்சைக் கட்டணம் எக்காரணத்திற்காகவும் மீளளிக்கப்படவோ, வேறு பரீட்சைகளிற்கு மாற்றப்படவோ மாட்டாது. அதே போன்று காசுக் கட்டளைகளோ அல்லது முத்திரைகளோ ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. பரீட்சைக் கட்டணம் செலுத்தப்படாத விண்ணப்ப படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. (பற்றுச்சீட்டின் நிழற் பிரதியொன்றை எதிர்கால பயன்பாட்டிற்காக தம்முடன் வைத்திருத்தல் வேண்டும்)பரீட்சைக் கட்டணம் செலுத்துவதற்காக மேல் குறிப்பிப்பட்டுள்ள பிரதேஷ செயலாளர் அலுவலகத்தினைத் தவிர வேறு மாகாண அலுவலகங்களில் அல்லது வங்கிகளில் அல்லது தபால் நிலையங்களில் செலுத்தப்படும் அல்லது உரிய திகதிக்குப் பின்னர் செலுத்தப்டும் பற்றுச் சீட்டுடன் கூடிய விண்ணப்ப படிவங்கள் நிராகரிக்கப்படும்.

6.2 பரீட்சை மத்திய நிலையம் - இப் பரீட்சை கீழ்வரும் நகரத்தில் நடைபெறும்.

| நகரம் | நகர இலக்கம் |
|---|---|
| அனுராதபுரம் | 01 |
| பொலனறுவை | 02 |

07. விண்ணப்பிக்கும் முறைமை

7.1 விண்ணப்ப படிவம் இந்த அறிவித்தலில் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கிணங்க விண்ணப்பதாரியினால் தாளின் இரு பக்கங்களையும் பாவித்து A4 அளவிலான தாளில் தயாரித்து தனது கையெழுத்துக்களினால் பூரணப்படுத்தல் வேண்டும்.1 லிருந்து 4 வரையிலான தலைப்பு முதலாம் பக்கத்திலும் 5 லிருந்து 7 வரை. இரண்டாம் பக்கத்திலும் ஏனைய தலைப்புக்கள் 3ம் பக்கத்திலும் அமையும் படியாக விண்ணப்ப படிவத்தினை பூர்த்தி செய்தல் வேண்டும். என்பதனைக் கவனத்தில் கொள்ளல் வேண்டும்.

7.2 குறிப்பிட்ட மாதிரிக்கு இணங்க தயாரிக்கப்படாத, சரியான முறையில் பூரணப்படுத்தப்படாத, உரிய வகையில் பரீட்சைக்கட்டணம் செலுத்தப்படாத மற்றும் குறித்த தினத்தின் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்ப படிவங்கள் நிராகரிக்கப்படும். அந்த விண்ணப்பதாரிகளிற்கு பரீட்சைக்கு தோற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது. அது தொடர்பாக முன்னறிவித்தல்கள் ஏதும் செய்யப்பட மாட்டாது.

7.3 பூரணப்படுத்தப்பட்டு அனுப்ப்ப்படும் விண்ணப்ப டிவத்தின் பிரதியொனறினை விண்ணப்பதாரி அருகில் வைத்திருப்பது பயனுடையதாகும்.

7.4 விண்ணப்பிக்கும் பாடம் / பாடங்கள் ஒருபோதும் மாற்றிக் கொள்ளப்படாததுடன் ஒரு விண்ணப்பதாரிக்கு ஒரு விண்ணப்பபடிவத்தினை மாத்திரமே முன்வைக்க முடியும். விண்ணப்பதாரர் ஒரு விடயத்தினை விட அதிக எண்ணிக்கைக்காக விண்ணப்பிப்பின் அதில் முன்னுரிமை வழங்க வேண்டியதனை விண்ணப்படிவத்தில் உரிய நிலையத்தில் குறிப்பிடல் வேண்டும்.

7.5 அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்ப படிவத்தினை தமது நிறுவனத் தலைவரூடாக முன்வைப்பதுடன் இந்த நியமணத்திற்கு தகுதியானவர் எனத்தெரிவு செய்யப்படுமிடத்து அந்த நிறுவனத்திலிருந்து விலக்களிப்பதற்கு சம்மதம் என்று உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

7.6 விண்ணப்பதாரியின் கையொப்பம் அரச பாடசாலைகளின் அதிபர்கள்/ சமாதான நீதவான் / சத்திய ஆணையர்கள் / சட்டத்தரணிகள்/ பிரசித்த நொத்தாரிசுகள் / முப்படை உத்தியோகத்தர்கள் அல்லது அரசின் நிலையான பதவியைக் கொண்ட பதவிநிலை உத்தியோகத்தர்கள் / பொலீஸ் சேவையின் பதவி நிலை உத்தியோகத்தர்கள் ஒருவரினால் சான்றுப் படுத்த வேண்டும்.

7.7 சரியாகப் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்ப படிவம் 2023.11.24 திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் வகையில் "செயலாளர், மாகாண அரச சேவை ஆணைக்குழு, வட மத்திய மாகாணம், அனுராதபுரம்." எனும் முகவரியிற்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்ப படிவம் அனுப்பப்படும் கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் இலங்கை ஆசிரியர் சேவைக்கு பட்டதாரியினை ஆட்சேர்ப்புச் செய்தல் - 2023 எனவும் விண்ணப்பிக்கும் பாடமும் கண்டிப்பாக குறிப்பிடப்படல் வேண்டும்.

7.8 தபால் மூலமாக விண்ணப்பிக்கையில் விண்ணப்ப பத்திரம் தொலைந்து போதல் அல்லது காலதாமதமாதல் தொடர்பாக எந்தவொரு குற்றச் சாட்டும் கவனத்தில் கொள்ளப்பட மாட்டது.

7.9 சிங்களம் தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பிரசுரிக்கப்படும் இந்த அறிவித்தலில் மொழிச் சிக்கல்கள் அல்லது ஏதேனும் ஒத்துப்போகாமை என்பன காணப்படுமெனில் அவ்வாறான சந்தர்ப்பங்களில் சிங்கள மொழிமூல அறிவித்தல் சரியானதாக ஏற்றுக் கொள்ளப்படும்.

8. விண்ணப்பதாரிகளினது அடையாளம்

விண்ணப்பதாரிகள் தாம் தோற்றிய பரீட்சையில், நேர்முகப்பரீட்சையில், மற்றும் செய்முறைப் பரீட்சையில் கீழ் குறிப்பிடப்படும் ஆவணங்களினூடாக தமது அடையாளத்தினை உறுதிப்படுத்தல் வேண்டும்.

I. ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தினூடாக வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை

அல்லது

II. செல்லுபடியாகும் கடவுச்சீட்டு / சாரதி உறுதிப்பத்திரம்

09. விண்ணப்ப படிவம் பூரணப்படுத்துகையில் கவனத்துடன் சரியான தகவல்களை வழங்குதல் வேண்டும். அத்தகவல்கள் எவ்விதத்திலும் திருத்தத்திற்கு இடமளிக்கப்படமாட்டாது. இந்த ஆட் சேர்ப்பு அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் குறித்த தினத்திற்கு பூரணப்படுத்தியிருக்கதமையிற்கிணங்க ஏதேனுமொரு விண்ணப்பதாரர் நேர்முகப் பரீட்சைக்கு மற்றும் செய்முறைப் பரீட்சைக்கு தோற்றியிருப்பதற்கு தகுதியற்றவர் என அறியப்பட்டால் அந்த பரீட்சை நடாத்தப்படுவதற்கு முன்னர் அல்லது நடாத்தப்படும் போது அல்லது அதன் பின்னர் அல்லது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரது / அவளது விண்ணப்பம் நிராகரிக்கப்படும். விண்ணப்பதாரர் பொய்யான தகவல்களை முன்வைத்திருப்பின் அல்லது வேணுமென்றே மறைத்திருப்பது பற்றி தெரிய வருமிடத்து எந்தவொரு சறந்தர்ப்பத்திலும் சேவையிலிருந்து விலக்குவதற்கு இயலும்

10. விண்ணப்பங்கள் ஏற்றுக் கொளப்படும் இறுதித் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் உரிய வகையில் விண்ணப்ப பத்திரம் முன்வைக்கப்பட்டுள்ள விண்ணப்பதாரிகளின் நிரந்தர வதிவிடம், வயது மற்றும் பட்டம் செல்லுபடியாகும் திகதி ஆகிய அடிப்படைத் தகுதிகள் தவிர ஏனைய தகைமைகள் பற்றி பரீட்சிக்காது எழுத்துப் பரீட்சைக்கு தோற்றுவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படுவதுடன் ஏனைய தகைமைகள் பற்றி நேர்முகப்பரீட்சையின் போது பரீட்சிக்கப்படும்..

11. மேல் 10ம் இலக்க பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகளினைப் பூரணப்படுத்தியிருக்கும் விண்ணப்பதாகைளிற்கு மாத்திரம் வடமத்திய மாகாண அரச சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் எழுத்துப் பரீட்சை, நேர்முகப் பரீட்சை மற்றும் செய்முறைப் பரீட்சைக்காக அழைப்புக் கடிதம் வழங்கப்படும். விண்ணப்பதாரிகளிற்கு அழைப்புக் கடிதம் அனுப்ப பட்டவுடன் அதுபற்றிய விபரங்கள் வட மத்திய மாகாண அரச சேவை ஆணைக்குழுவின் அலுவலக வலைத்தளத்தில் ( psc.nc.gov.lk) அறிவித்தல் வெளியிடப்படும். எழுத்துப் பரீட்சை, நேர்முகப்பரீட்சை அல்லது செய்முறைப் பரீட்சை நடாத்தும் 3 நாட்களிற்கு முன்னர் அழைப்புக் கடிதம் கிடைக்கப்பெறாவிடில் அது பற்றி உடனடியாக "செயலாளர், மாகாண சேவை ஆணைக்குழு, வட மத்திய மாகாணம், அனுராதபுரம்". எனும் முகவரிக்கு அறிவித்தல் வேண்டும். அவ்வாறு அறிவிக்கையில் கீழ்வரும் அனைத்து விபரங்களையும் முன்வைத்தல் வேண்டும்.

1- விண்ணப்பதாரியினது முழுப் பெயர்
2- தனிப்பட்ட முகவரி / சேவை நிலையத்தின் முகவரி
3- தேசிய அடையாள அட்டை
4- தொலைபேசி இலக்கம்

12. விண்ணப்ப படிவம் கோரப்படும் அறிவித்தலிற்குரிய விடயங்கள் அல்லது அந்த அறிவித்தலில் குறிப்பிடப்படாத அல்லது அந்த அறிக்கையில் விதிமுறைகளினை ஆராய்ந்தல்லாது வேறு விடயங்கள்

காணப்படுமெனில் அது தொடர்பாக வட மத்திய மாகாண அரச சேவை ஆணைக்குழுவின் தீர்மாணம் இறுதியானதாகும்.

13. இப்பரீட்சை, நேர்முகப்பரீட்சை, செய்முறைப் பரீட்சை நடாத்துதல், காலம் தாழ்த்துல், இடைநிறுத்துதல் அல்லது நடாத்திய பின்பு தெரிவு செய்தல் / தெரிவு செய்யாமை அல்லது காலியிட எண்ணிக்கையினை பூரணப்படுத்தல் மற்றும் அரைவாசியாக பூரணப்படுதல் தொடர்பாக இறுதித் தீர்மாணம் வட மத்திய மாகாண அரச சேவை ஆணைக்குழுவினது உரிமையாகும்.

வட மத்திய மாகாண அரச சேவை ஆணைக்குழுவின் நியமத்தின்படி

செயலாளர்,
மாகாண அரச சேவை ஆணைக்குழு,
வட மத்திய மாகாணம்.
2023.10.27

ஆசிரியர் பணியிடங்களின் எண்ணிக்கை
பற்றிய தகவல் 01

| பாட இல | பாடம் | வட மத்திய மாகாணம் | | | |
|---|---|---|---|---|---|
| | | சிங்கள ஊடகம் | தமிழ் ஊடகம் | ஆங்கில ஊடகம் | சேகரிப்பு |
| 1 | ஆரம்பப்பிரிவு | 415 | 47 | | 462 |
| 2 | ஆங்கிலம் | 133 | 26 | | 159 |
| 3 | கணிதம் | 77 | 15 | | 92 |
| 4 | விஞ்ஞானம் | 95 | 6 | | 101 |
| 5 | புவியியல் விஞ்ஞானம் | 70 | 10 | 7 | 87 |
| 6 | சங்கீதம் (மேற்கத்தைய) | 44 | 0 | | 44 |
| 7 | சித்திரம் | 61 | 11 | | 72 |
| 8 | வரலாறு | 49 | 5 | | 54 |
| 9 | குடியுரிமைக் கல்வி | 80 | 12 | 7 | 99 |
| 10 | தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் | 40 | 10 | | 50 |
| 11 | இரண்டாம் மொழி (தமிழ்) | 41 | 0 | | 41 |
| 12 | வியாபாரக் கல்வி | 8 | 0 | | 8 |
| 13 | வியாபாரம் மற்றும் கணக்கியல் கல்வி | 18 | 8 | | 26 |
| 14 | தாய்மொழி (சிங்களம்)/ தாய்மொழி (தமிழ்) | 41 | 11 | | 52 |
| 15 | புத்த சாசனம் | 17 | 0 | | 17 |
| 16 | சுகாதார மற்றும் உடற்கல்வி | 15 | 1 | 7 | 23 |
| 17 | நாட்டியம் | 21 | | | |
| | | 1225 | 162 | 21 | 1387 |

உப அட்டவணை 02 (கல்வித் தகைமை)

| தரங்கள் | விடயம் | ஆட்சேர்ப்புச் செய்வதற்கு தேவையான கல்வித் தகைமை |
|---|---|---|
| 1-5 ஆரம்பப் பிரிவு | ஆரம்பப்பிரிவு | பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பல்கலைக்கழகத்தில் சிங்களம் / தமிழ் மொழியினை பிரதான பாடமாகக் கொண்ட விஷேட / பொது பட்டமொன்றைப் பெற்ற கலை பட்டதாரியாயிருத்தல்<br>அல்லது<br>கலைப்பாடநெறியின் கீழ்பொது / விஷேட பட்டத்துடன் உயர்தரப் பரீட்சையில் சிங்களம் / தமிழ் பாடத்தினைப் பயின்றிருத்தல்<br>மற்றும்<br>கா.பொ.த (ச/த) கணிதம் மற்றும் சிங்களம் / தமிழ் மொழியில் சித்தியடைந்திருத்தல். |
| 6-11 இடைநிலை | ஆங்கிலம் | பல்கலைக்கழக மானியங்கள் அணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட கல்லூரியில் ஆங்கில மொழி தொடர்பான விஷேட பட்டம்<br>அல்லது<br>ஆங்கில மொழியினை பிரதான பாடமாக பயின்று பொதுப்பட்டம் பெற்றிருத்தல்<br>அல்லது<br>ஏற்றுக் கொள்ளப்பட்ட பலகலைக்கழகத்தில் பெற்றுக் கொண்ட எந்த பட்டத்துடனும் இலங்கை உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவனத்தலில் ( SLIATE ) ஊடாக வழங்கப்படும் தேசிய உயர் தொழில் நுட்ப பாடநெறி (ஆங்கிலம்) இருவருடங்கள் காரணமாக கால இடைவெளியினைக் கொண்ட பாடநெறி மற்றும் 06 மாதகாலம் பாடசாலை ஆசிரியர்பயிற்சியினை பூரணப்படுத்தியிருத்தல்<br>மற்றும்<br>கா.பொ.த.(சா/த) பரீட்சையில் ஆங்கில மொழிக்காக சாதாரண சித்தியினைப் பெற்றிருத்தல் |
| | கணிதம் | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பல்கலைக்கழகங்கள் / நிறுவனங்களினூடாக வழங்கப்படும் விஞ்ஞானமானி (பௌதீக விஞ்ஞானம்) பட்டத்தினைப் பெற்றிருத்தல் வேண்டும்.<br>அல்லது |

| | | |
|---|---|---|
| | | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பல்கலைக்கழகங்கள் / நிறுவனங்கள் மூலமாக வழங்கப்படும் விஞ்ஞானமானி பட்டத்தினைப் பெற்றிருத்தல் மற்றும் கா.பொ.த (உ/த) ற்காக இணைந்த கணிதம் விடயத்தினை பயின்று சித்தியடைந்திருத்தல். |
| | விஞ்ஞானம் | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் எற்றுக் கொள்ளப்பட்ட பல்கலைக்கழகங்கள் / நிறுவனங்களினூடாக வழங்கப்படும் விஞ்ஞானமானி / பிரயோக விஞ்ஞானமானி / விஞ்ஞானமானி (விவசாயம்) போன்றவற்றை முதன்மைப் பட்டமாக சித்தியடைந்திருத்தல் மற்றும் கா.பொ.த.(உ/த) பரீட்சையில் கீழ்க்குறிப்பிடப்படும் 03 பாடங்களிலும் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.<br>1. பௌதீக விஞ்ஞானம்<br>2. இரசாயன விஞ்ஞானம்<br>3. உயிரியல் விஞ்ஞானம் |
| | புவியியல் விஞ்ஞானம் | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் புவியியல் விஞ்ஞானம் தொடர்பான விஷேட பட்டம்<br>அல்லது<br>புவியியல் விஞ்ஞானத்தினைப் பிரதான பாடமாகக் கொண்ட சாதாரண பட்டத்தினைப் பெற்றிருத்தல் |
| | சங்கீதம் (மேற்கத்தைய) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் எற்றுக் கொள்ளப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது நிறுவனத்தின் மூலமாக வழங்கப்பட்ட பிரசங்க கலை பட்டம் (சங்கீதம்) பெற்றிருத்தல்<br>அல்லது<br>பிரசங்க கலை / நடனக்கலை (பொது) பட்டத்தினைப் பெற்று, சங்கீத பாடத்தினை பட்டத்தின் ஒரு பிரதான பாடமாக சித்தியடைந்திருக்க வேண்டும் என்பதுடன் அந்த பட்ட பாடநெறியின் விடயங்களின் எண்ணிக்கையில் 1/3 சங்கீத விடயத்திற்குரியதாக பூரணமாக இருத்தல் வேண்டும்.<br>நேர்முகப் பரீட்சையில் பிரயோக அறிவு மற்றும் விடயக்கல்வி தொடர்பான அறிவு பரிசீலிக்கப்படும் |
| | சித்திரம் | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பல்கலைக்கழகத்தில் அல்லது நிறுவனம் மூலமாக வழங்கப்படும் பிரசங்க கலை சித்திர பட்டத்தினைப் |

| | | |
|---|---|---|
| | | பெற்றிருத்தல்<br>அல்லது<br>கலைமானி (பொத) பட்டத்தினை பெற்ற, சித்திரப் பாடப் பட்டத்தில் ஒரு பிரதான பாடமாக பயின்றிருத்தல் வேண்டும் என்பதுடன் அந்த பட்டம் பாடநெறியின் சித்தி எண்ணிக்கையில் 1/3 பகுதியை சித்திரப் பாடத்தில் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.<br>நேர்முகப் பரீட்சையில் பிரயோக அறிவு மற்றும் பாடத்தினை கற்பிப்பது தொடர்பான அறிவு பரீட்சித்துப் பார்க்கப்படும். |
| 6-11 இடைநிலை | வரலாறு | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் வரலாறு / தொல்லியல் விஞ்ஞானம் தொடர்பான விஷேட பட்டம்.<br>அல்லது<br>வரலாறு / தொல்லியல் விஞ்ஞானத்தினை பிரதான விடயமாக பயின்று பொதுப் பட்டமொன்றினைப் பெற்றிருத்தல் |
| | குடியுரிமைக் கல்வி | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பல்கலைக் கழகமொன்றில் சமூக விஞ்ஞானம் / அரசியல் விஞ்ஞானம் / புவியியல் விஞ்ஞானம் தொடர்பான விஷேட பட்டம்.<br>அல்லது<br>சமூக விஞ்ஞானம் / அரசியல் விஞ்ஞானம் / புவியியல் விஞ்ஞானத்தினை பிரதான பாடமாகக் கொண்ட பொதுப் பட்டமொன்றினைப் பெற்றிருத்தல் |
| | தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் எற்றுக் கொள்ளப்பட்ட பல்கலைக்கழகத்தில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் அல்லது கணினி விஞ்ஞானத்தினை பிரதான பாடமாகக் கொண்ட விஷேட அல்லது பொதுப் பட்டத்தினைப் பெற்றிருத்தல். |
| | இரண்டாம் மொழி (தமிழ்) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் எற்றுக் கொள்ளப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் தமிழ்மொழி பிரதான பாடமாகக் கொண்ட பொது அல்லது விஷேட பட்டமொன்றைப் பயின்றிருத்தல். |
| | வியாபாரம் மற்றும் | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் |

| | | |
|---|---|---|
| | கணக்கியல் கல்வி<br><br>வியாபாரக் கல்வி | ஏற்றுக் கொள்ளப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் வியாபாரக் கல்வி / வியாபார நிர்வாகம் / முகாமைத்துவம் / கணக்கியல் / பிரதான விடயமாக ஏற்றுக் கொள்ளப்பட்டு பொதுப்பட்டமொன்றை பெற்றிருத்தல். |
| | தாய்மொழி (சிங்களம்) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் எற்றுக் கொள்ளப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் சிங்களமொழி தொடர்பாக விஷேட பட்டமொன்றை பெற்றிருத்தல் அல்லது சிங்களமொழியினை பிரதான விடயமாக பயின்று பொதுவான பட்டமொன்றை பெற்றிருத்தல். |
| | தாய்மொழி (தமிழ்) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் தமிழ்மொழி தொடர்பான விஷேட பட்டம் அல்லது தமிழ்மொழியினை பிரதான பாடமாகக் கொண்ட பொதுப் பட்டத்தினைப் பெற்றிருத்தல். |
| | புத்த சாசனம் | ஏற்றுக் கொள்ளப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் புத்த சாசனம் / பௌத்த கலாச்சாரத்தினை பிரதான பாடமாகக் கொண்ட விஷேட அல்லது சாதாரண பட்டத்தினைப் பெற்றிருத்தல். |
| | சுகாதார மற்றும் உடற்கல்வி | ஏற்றுக் கொள்ளப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் சுகாதார மற்றும் உடலியற்கல்வி தொடர்பான விஷேட பட்டம் அல்லது பொதுப் பட்டமொன்றைப் பெற்றிருத்தல் / விளையாட்டு விஞ்ஞானம் மற்றும் முகாமைத்துவம் தொடர்பான விஞ்ஞானி கௌரவ பட்டமொன்றை வைத்திருத்தல்<br>அல்லது<br>ஏற்றுக் கொள்ளப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் எந்தவொரு பட்டத்துடனும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் எற்றுக் கொள்ளப்பட்ட உயர் கல்வி நிறுவனமொன்றில் ஒரு வருடத்திற்கு குறையாத சுகாதார மற்றும் உடற்கல்வி தொடர்பான டிப்ளோமாவொன்றினை பெற்றிருத்தல் |
| | நாட்டியம் | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் ஊடாக வழங்கப்படும் பிரசங்க கலை பட்டம் ( நடனம்) பெற்றிருத்தல்<br>அல்லது<br>பிரசங்க கலை / நாட்டியக் கலை (பொது) பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.. நாட்டியக் கலை பட்டத்தினை ஒரு பிரதான பாடமாக |

| | | |
|---|---|---|
| | | சித்தியடைந்திருக்க வேண்டுமென்பதுடன் அந்த பட்ட பாடநெறியின் பாட அலகுகள் எண்ணிக்கையில் 1/3 ஆனது நடனக் கலைக்கு உரியதாக பூரணப்படுத்தியிருத்தல் வேண்டும்.<br>நேர்முகப் பரீட்சையின் பொது செய்முறை அறிவு மற்றும் விடய கற்பித்தல் தொடர்பான அறிவு பரிசீலித்துப் பார்க்கப்படும். |

இணைப்பு 2

| |
|---|
| |

அலுவலக பாவனைக்காக

வட மத்திய மாகாண பாடசாலைகளில் நிலவும் சிங்கள தமிழ் மொழிமூல இலங்கை ஆகிரியர் சேவையின் 3 ஆம் வகுப்பின் 1 (அ) தரத்தின் ஆசிரியர்வெற்றிடங்களிற்கு பட்டதாரிகளினை இணைத்துக் கொள்ளல்

| விண்ணப்பிக்கும் பாட இல | விண்ணப்பிக்கும் பாடம் | முன்னுரிமை |
|---|---|---|
| | | |
| | | |
| | | |

(**வெற்றிட ஆவணத்திற்கிணங்க பூரணப்படுத்துக.அதிக முன்னுரிமை வழங்க வேண்டியதை 01 எனவும் ஏனையவற்றை முன்னுரிமை வழங்க வேண்டியவற்றை தொடராகவும் இலக்கமிடுக**)

வெற்றிடத்திற்காக விண்ணப்பிக்கும் மொழி மூலம் - ( சிங்களம்/ தமிழ்/ ஆங்கிலம் )

பரீட்சை ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழியில் மாத்திரம் நடைபெறுவதனால் பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம்: ங்களம் ☐ தமிழ் ☐

நிலையான வதிவிடம் மாகாணம் ............................ மாவட்டம் ..............................

நகர எண் ☐

1. 1.1 முதலெழுத்துக்களை கடைசியாக இட்டு முதலெழுத்துக்களுடன்பெயர் ( ஆங்கில கெப்பிட்ரல் எழுத்துக்களில் உதாரணம் -PERERA A.B) - ................................................................................................................................................................................................

   1.2 முதலெழுத்துக்களினால் அறியப்படும் பெயர் ( ஆங்கில கெப்பிட்ரல் எழுத்துக்களில்) ................................................................................................................................................................................

   1.3 முழுப் பெயர்(சிங்களம்/தமிழ்) - ..................................................................................................
   ................................................................................................................................................................................................

2. தற்போதைய முகவரி (ஆங்கில கெப்பிட்ரல் எழுத்துக்களில்) - ..............................................
   ................................................................................................................................................................................................

   2.1. நிலையான வதிவிடத்தின் பரதேச செயலாளர பிரிவு - ..........................................................

   2.2 கிராம உத்தியோகத்தர பிரிவு - ...........................................................................................................

3. 3.1 தேசிய அடையாள அட்டை இல - ........................................................................................................

   3.2 பிறந்த திகதி - ...........................................................................................................................................

   3.3 2023.11.24 திகதிக்கு வயது - ...................................................................................................

   3.5 ஆண் /பெண் நிலை - ..........................................................................................................................

   3.5 திருமணமாணவர்/ திருமணமாகாதவர் - ..........................................................................

   3.6 தொ.பேசி இல - ..................................................................................................................................

4. பட்டப்பட்டிப்பு பற்றிய விபரம்

   4.1 பட்டப்படிப்பின் பெயர் - ....................................................................................................................

   4.2 மொழிமூலம் - ................................................................................................................................................

   4.3 பல்கலைக் கழகத்தின் அல்லது உரிய நிறுவனத்தின் பெயர் - ...............................................

4.4 பட்டம் செல்லுபடியாகும் திகதி - ........................................................................................................

4.5 பட்டத்தினை மேற்கொண்டுள்ள பிரதான பாடம் / பாடங்கள் (ஆங்கிலத்தில்)(பட்டச் சான்றிதழின் மற்றும் பெறுபேற்றுச் சான்றிதழின் சான்றுப்படுத்தப்பட வேண்டிய பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்.)..........................................................................................................................................

..........................................................................................................................................................................................

5

5.1 க.பொ.த (உ/த) பரீட்சை (பெறுபேறு ஆவணங்கள் தன்னால் சான்றுப்படுத்தப்பட்டு நிழற்பிரதிகள் இணைக்கப் படல் வேண்டும். அவை இல்லாத விண்ணப்ப படிவங்கள் நிராகரிக்கப்படும்)

5.2 பரீட்சை இல மற்றும் வருடம் ....................................

| பாடம் | பெற்றுக்கொண்டபேறுபேறு |
|---|---|
| | |
| | |
| | |

6 க.பொ.த (ச/த) பரீட்சை (பெறுபேறு ஆவணங்களில் தன்னால் சான்றுப்படுத்தப்பட்டு நிழற்பிரதிகளை இணைத்தல் வேண்டும். அந்த ஆவணங்களில் அவை இல்லாத விண்ணப்ப படிவங்கள் நிராகரிக்கப்படும்)

6.1 முதலாம் தடவை

பரீட்சை வருடம் .................................. பரீட்சை இல

| | பாடம் | பெறுபேறு | | பாடம் | பெறுபேறு |
|---|---|---|---|---|---|
| 01. | | | 01. | | |
| 02. | | | 02. | | |
| 03. | | | 03. | | |
| 04. | | | 04. | | |
| 05. | | | 05. | | |

(விருப்ப பாடங்கள் உள்ளடக்க வேண்டிய அவசியமில்லை)

6.2 இரண்டாம் தடவை

பரீட்சை வருடம் .................................. பரீட்சை இல

| | பாடம் | பெறுபேறு | | பாடம் | பெறுபேறு |
|---|---|---|---|---|---|
| 06. | | | 06. | | |
| 07. | | | 07. | | |
| 08. | | | 08. | | |
| 09. | | | 09. | | |
| 10. | | | 10. | | |

7 விண்ணப்பதாரியின் சான்று

7.1 இவ்விண்ணப்ப டிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் அனைத்தும் உண்மையானவை மற்றும் சரியானவை என உறுதியளிக்கின்றேன். இதில் ஏதேனும் பகுதி பூரணப்படுத்தப்படாமல் அல்லது / தவறாக பூரணப்படுத்தப்பட்டு / பிழையாக பூர்த்தி செய்யப்பட்டு இருக்குமெனின் எனது விண்ணப்பம் நிராகரிக்கப்படும் என்பதை ஏற்றுக் கொள்கின்றேன்

7.2 இந்தப் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டதன் பின்பு அ,ல்லது தகைமையற்றவர் என்பது தெரியவந்தால் நான் சேவையிலிருந்து நீக்கப்படுவேன் என்பதை அறிவேன்.

7.3 இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுடன் நான் இணங்குகின்றேன்

7.4 மாகாணத்தின் எந்தவொரு பாடசாலையிலும் நியமணத்தை ஏற்றுக் கொள்ள இணங்குகின்றேன் / இணங்க வில்லை.

திகதி ............................................................ விண்ணப்பதாரியின் கையொப்பம்.............................................

8 பணம் செலுத்திய பற்றுச் சீட்டினை இங்கே ஒட்டவும்.

8.1 பணம் செலுத்தப்பட்ட பிரதேச செயலாளர் பிரிவு - ..........................................................................................

8.2 செலுத்திய திகதி - ..........................................................................

8.3 பற்றுச்சீட்டு இல - ....................................................................

| |
|---|
| பரீட்சைக் கட்டணம் செலுத்தி பெற்றுக் கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டினை கழறாதவண்ணம் இங்கு ஒட்டவும் |

9 கையொப்பத்தினை சான்றுப்படுத்துதல்

இவ்விண்ணப்படிவத்தினை முன்வைக்கும் திரு/திருமதி/செல்வி ............................................................................ நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்றும் ......................... ஆம் திகதி என் முன்னிலையில் அவரது கையொப்பத்தை இட்டார் என்றும் சான்றுப்படுத்துகின்றேன்.

.............................................................................................

கையொப்பத்தினை சான்றுப்புடுத்தும் உத்தியொகத்தரது கையொப்பம்.

திகதி .............................................

சான்றுப்படுத்திய உத்தியோகத்தரது முழுப் பெயர் - ..........................................

பதவி முகவரி - ..................................................................

(பதவி முத்திரையினால் உறுதிப்படுத்துக) - ...........................................................

10 விண்ணப்பதாரி மத்திய அரசின் அல்லது மாகாண அரச சேவை ஊழியர் எனில் அமைச்சு / திணைக்கள / நிறுவன பிரதானியினது சான்றிதழ்

இவ்விண்ணப்பதாரியான திரு / திருமதி / செல்வி தற்போது இந்த அமைச்சில் / திணைக்களத்தில் / நிறுவனத்தில் ............................... ஆக நிரந்தர / தற்காலிக / வேறு ஊழியராக சேவையாற்றுவதாகவும், அவர் இந்தப் பதவிக்காக தெரிவு செய்யப்படுமிடத்து தற்போதைய பதவியிலிருந்து விலக்களிக்கப்பட முடியும் / முடியாது எனவும் அறியத் தருகின்றேன்.

.............................................................................

நிறுவனப் பிரதானியினது கையொப்பம்

(பதவி முத்திரை)

பெயர் ..................................................

பதவி ...................................................

முகவரி ..................................................

திகதி .....................................................